1.4.2024

அ.வ.எண். 217/2022

பிவாசா.1 சொக்கநாதன்

வாதிதரப்பு குறுக்கு விசாரணை

என்னுடைய சொத்துக்கள் சூலூர் வட்டம் மலைப்பாளையம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய சொத்துக்கள் எனக்கு 1936 ஆவணத்தின் அடிப்படையில்தான் பாத்தியம் நான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். என்னுடைய தந்தைவழி பாட்டி மருதக்காள் புலஎண்.59/3 பூமியை கிரையம் பெற்றார். எனது பாட்டி மருதக்காளின் இறப்புசான்றிதழ் , வாரிசு சான்றிதழ் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி 1936 பத்திரம் யார் பெயரில் உள்ளது எப்படி எங்களுக்குபாத்தியம் என்றெல்லாம் எதிர்வழக்குரை மற்றும் எனது முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். க.ச.எண்.59/3 பூமியை தற்பொழுது நாங்கள் தான் அனுபவம் செய்ய என்பதை காட்ட பட்டா சிட்டா அடங்கல் போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். எங்களுடைய அனுபவத்தை காட்டக்கூடிய வருவாய்துறை ஆவணங்களும் தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி அவர்கள் சொத்துக்கு புலஎண்.59/3 ல் கிழபுறமுள்ள தென்வடல் தடத்தின்வழியாக சென்றுவருகிறார் என்றால் அவர்களுக்கு தடம் இல்லை ஆனால் நடந்துவருகிறார். வாதிக்கு அவரது தகப்பனார் காலத்திலிருந்தே அவர்கள் குடும்பத்திற்குள் ஏற்பட்ட 1941 பாகபிரிவினை பத்திரப்படி வழக்கு சொத்தில் 59/3 காலை வழியாக நடந்து வருகிறார் என்றால் சரியல்ல.

மேற்படி 1941 ஆவணத்தின் 59/3 காலை வழியாக வாதிகளுக்கு தடம் சொல்லப்பட்டுள்ள விசயம் எனக்கு இந்த வழக்கிற்கு பின்னிட்டுதான் பிரச்சனை வந்த பிறகு தெரியும். எனது தகப்பனார் காலத்திலிருந்தே 59/3 காலையில் கிழபுறம் தென்வடல் தடம் வாதிகளுக்கு உள்ளது என்பது எனக்கு தெரியும் என்றும் அதை மறைத்து இந்த வழக்கிற்காக தற்பொழுது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்ச ரியல்ல. 59/3 ல் பிஎப்பி வாய்க்கால் செல்கிறது என்றால் ஆமாம்.

அந்த வாய்ககாலை ஒட்டி பிஎபி துறை அதிகாரிகளுக்கு சென்றுவர தடம் உள்ளது என்றால் ஆமாம். அந்த தடத்தில் ஆரம்ப காலத்தில் சங்கிலி அமைத்து தடுக்கப்பட்டிருக்கும் என்றால் ஆமாம். இடையில் சில இடங்கில் விபத்து ஏற்பட்டதால் மேற்படி சங்கிலியை பிஎபி துறையினர் அகற்றிவிட்டனர் என்றால் ஆமாம். மேற்படி பிஏபி தடம் மேற்படி வாய்க்காலை பராமரிப்பு செய்ய ஏற்படுத்தப்பட்டது என்றால் ஆமாம். 59/3 காலையிலுள்ள தடத்தில் வாதிகள் தேங்காய் கொண்டுசெல்ல லாரிமூலம் முயற்சி செய்தபொழுது நாங்கள் அதை தடுத்துவிட்டதால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அதற்கு முன்பு நீதிமன்ற ஆணையர் எனக்கு அறிவிப்பு அனுப்பி அதை நான் பெற்றுக்கொண்டேன். ஆணையர் இடத்தை பார்வையிடும்பொழுது நான் உடன்இருந்தேன். நீதிமன்ற ஆணையர் எனக்கு என்ன உரிமை உள்ளது எனது தரப்பில் சொல்லவேண்டுமென்று என்று கேட்டார்.நானும் எனக்கு பாத்தியப்பட்டதை சொன்னேன்.

நீதிமன்ற ஆணையர் வரும்பொழுது வழக்கு சொத்திலுள்ள மூங்கில் தட்டி பற்றி நான் ஆணையரிடம் சொன்னேனா என்றால் தட்டியை நான்தான் வைத்தேன்.ஆணையரிடம் அதைப்பற்றி தெரிவித்தேன். ஆணையர் தாக்கல் செய்த முதன்மை அறிக்கையை நான் படித்துப்பார்த்தேன். அதில் அதற்கான ஆட்சேபணையும் தாக்கல் செய்துள்ளேன். ஆணையர் முதல் அறிக்கையை மூங்கில் தட்டி பற்றி சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. அதைபோல் நீதிமன்ற ஆணையர் மூங்கில் தட்டி பொறுத்து அறிக்கை சொல்லவில்லை என்று ஆட்சேபணையில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

வழக்கு சொத்தை எனது மனுவில் அடிப்படையில் 2வது முறை நீதிமன்ற ஆணையர் பார்வையிடவ ந்தார் என்றால் ஆமாம். அப்பொழுதுதான் நான் முதன்முதலில் மூங்கில் தட்டி இருந்ததை எனது வழக்கறிஞரிடம் மற்றும் ஆணையரிடம் காட்டினேன். அதன் பின்புதான் புல எண்.59/3 உள்ள தடத்தையும் பிஏபி தடத்தையும் நான் ஆணையரிடம் காட்டினேன். அதன் பிறகு சிறிது தூரம் கிழக்கே சென்று பேங்க்

ஆப் பரோடா இருக்கும் இடத்தை ஒட்டி உள்ள இடத்தை காட்டினேன். மேற்படி வங்கிக்கு மேல்புறம் பெரிய கேட் அமைத்து பூட்டிப்பட்டிருந்தது என்றால் ஆமாம். மேற்படி வங்கி , அந்த கேட் அமைத்த இடம் என்ன காலையில் உள்ளது என்று எனக்கு தெரியாது. வாதிக்கு புலஎண்.59/3 ல் தான் தடம் உள்ளது என்றும் வேறு 3 வது நபரின் இடத்தை காட்டி தடம் உள்ளதாக சொல்வது ஏற்றுக்கொள்ளமுடியாது என்றால் சரியல்ல. நாச்சம்மாள் எனது தாயார். இந்த வழக்கிற்கு பின்பு நான் கொடுத்த புகார் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம் அது பிவாசாஆ.5. அதற்கு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட மனு ரசீது என்னிடம் காட்டப்படுவது அது பிவாசாஆ.6. பிவாசாஆ.5 புகாரில் மூங்கில் தட்டி எடுக்கப்பட்டதாக எந்த வாசகம் இல்லை என்றும் அது என்னுடைய கையெழுத்து எந்த தேதியில் கொடுக்கப்பட்டது போன்ற விசயங்களும்தெளிவாக இல்லை என்றால் சரியல்ல.

மேற்படி பிவாசாஆ.5 கொடுக்கப்பட்ட புகாரில் வாதிகள் அடிக்க வந்தார்கள் உயிருக்கு பாதுகாப்பு இல்லை பாதுகாப்பு வேண்டிதான் கொடுக்கப்பட்டது. மேற்படி புகார்கள் நீதிமன்ற ஆணையர் 2 வது முறையாக வழக்கு சொத்தை பார்வையிட்டு சென்ற பின்னிட்டு கொடுக்கப்பட்டது. பிவாசாஆ.6 மனு ரசீது மூங்கில் தட்டியை காணவில்லை என்று புகார் கொடுத்தற்கான ரசீது என்றும் என்றால் ஆமாம். மேற்படி புகார் மற்றும் மனு ரசீதுகள் இந்த வழக்கிற்கு பின்னிட்டு நாங்கள் ஏற்படுத்திய ஆவணம் என்றும் நீதிமன்ற ஆணையர் முதன்முதலில் பார்வையிட்டு சென்ற பின்னிட்டு 2 வது முறை வருவதற்கு முன்பு நாங்கள் மூங்கில் தட்டி அமைத்துவிட்டு அமைத்துள்ளோம் என்றால் சரியல்ல. புலஎண்.59/3 ல் வாதி நடப்பதற்கு அவருக்கு எல்லா உரிமையும் உள்ளது என்றும் அதை தடுப்பதற்கு எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. எனவே வாதிக்கு கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றும் புலஎண்.59/3 தவிர வேறு தடம் வாதிக்கு இல்லை என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.
மறுவிசாரணை இல்லை.

Sd/சொக்கநாதன்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga

District Munsif
Sulur

பிரதிவாதியின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.